

# மர்ஹூம் அல்-ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் மௌலவி அவர்களின் வாழ்வும் பணிகளும்





தொகுப்பு:- ஏ.ம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ஹூம் அல்-ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் மௌலவி அவர்களின் வாழ்வும் பணிகளும்

- நினைவு மலர் -



தொகுப்பு :

ஏ.எம். கஸ்புள்ளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

- **நூலின் பெயர்**

  மர்ஹூம் அல்-ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் மௌலவி அவர்களின் வாழ்வும் பணிகளும்

- **மலர்க்குழு**

  எம்.எஸ். ஷரீப்
  எம்.ஐ. றஹ்மத்துல்லாஹ்
  எம்.எஸ். நசுர்தீன்
  ஏ.எல்.எம். நளீப்
  எஸ். மிஸ்பாஹ்
  ஏ.சீ. முபாரக்
  எம்.வை. சியாத்

- **பதிப்பு**

  2021 ஒக்டோபர் 4

- **பதிப்புரிமை**

  ஏ.எம். கஸ்புள்ளா (077 4488441)

- **பதிப்பகம்**

  செய்ப் பதிப்பகம், கட்டையாறு வீதி, கிண்ணியா - 02

- **பக்கங்கள்**

  40

- **கணினி வடிவமைப்பு**

  எம்.ஏ.எம். அஸ்மி, கிண்ணியா - 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் Secreatry } 2334815
நிர்வாக உத்தியோகத்தர் Administrative Officer } 2334261
காரியாலயம் Office } 2334323
பயிற்சி பிரிவு Training Unit } 2334258
Fax ..........................2334323

நீதி அமைப்பு
நீதி அமைச்சின் புதிய கட்டடம்
நிதிமன்ற வீதி
கொழும்பு 13

No: 80,
Ministry of Justice's New Building,
Court Road,
Colombo 12.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
**MEDIATION BOARDS COMMISSION**

---

எனது இல / My No } MB/Tri/242/2019/GEN
உமது இல / Your No }
திகதி / Date } 2021.02.12

திரு. எம்.எம். யூசுப் (242/35)
அன்னாரின் குடும்பத்தினருக்கு

## இரங்கல் உரை

இல 242 - கிண்ணியா மத்தியஸ்த சபை

மேற்குறித்த மத்தியஸ்த சபையின் உறுப்பினரான திரு.எம்.எம். யூசுப் என்பவரின் மரணம் தொடர்பில் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஆழ்ந்த சோகத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரால் கிண்ணியா மத்திய சபைக்கு ஆற்றப்பட்ட சேவையை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

ஒப்பம்:
றாஜனீ அத்தப்பத்து
செயலாளர்
மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு

றாஜனீ அதபத்து
செயலாளர்
மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு
நீதி அமைச்சு
கொழும்பு 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்பாசிரியர் உரை

**மர்ஹூம்** முத்தலிப் முகம்மது யூசுப் மௌலவி அவர்கள் *2020.10.04* ஆம் திகதி இவ்வுலகை விட்டு பிரிந்தபோதும் வாழ்நாளில் சமூக அக்கறை கொண்டு செயற்பட்ட அவர்களது செயற்பாடுகள் இன்றும் பேசக்கூடியதாக உள்ளன. இவ்வாறான ஆளுமைமிக்க ஒருவரைப் பற்றி தொகுத்தளிக்க எல்லாம்வல்ல இறைவன் எனக்கு துணைபுரிந்துள்ளான். அவரது இரண்டாவது மகளை திருமணம் முடித்ததன் மூலம் எனக்கு மாமனாரான அன்னாரைப் பற்றி இச்சிறு தொகுப்பு நினைவு மலர் வெளியிடப்படுகிறது. இந்நூலில் ஏதும் பிழைகள் இருந்தால் என்னைப் பொருந்திக் கொள்ளுமாறு முதலில் அல்லாஹ்விடமும் உங்களிடமும் பணிவாக வேண்டிக் கொள்கின்றேன். மேலும் இந்நினைவு மலருக்கு ஆக்கங்கள் தந்துதவிய செயலாளர் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, கல்விமான்கள், அரபுக் கல்லூரி அதிபர்கள், சவூதி தூதரக உதவிக் கணக்காளர், ஆசிரிய ஆலோசகர்கள், உறவினர்கள், அதிபர்கள் அனைவருக்கும் எனது இதயத்தின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

ஏ.எம். கஸ்புள்ளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. என்றும் எங்கள் உள்ளங்களில் வாழும் தியாகி ............ 7
2. மனித நேயமிக்க மாமனிதர் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் ............ 9
3. இறைவன் கொடுத்த வரம் ............ 13
4. யூசுப் மௌலவியும் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியும் ............ 16
5. ஈச்சந்தீவிலிருந்து தொடங்கிய பயணம் ............ 19
6. எல்லோரது உள்ளங்களையும் கொள்ளை கொண்ட யூசுப் மௌலவி ............ 25
7. எனது பார்வையில் மர்ஹூம் யூசுப் மௌலவி ............ 27
8. மறுமைக்கும் கிட்டட்டும் ............ 31
9. யூசுப்' எனும் ஆளுமை ............ 32
10. குடும்ப உறவைப் பேணும் உத்தமர் ............ 36
11. யூசுப் மௌலவி பற்றி இவர்கள் ............ 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மௌலவி எம்.ஏ.முஹம்மது றபீஸ்**

அதிபர், சுமையா மகளிர் அரபுக் கல்லூரி

# என்றும் எங்கள் உள்ளங்களில் வாழும் தியாகி அஷ்ஷெய்ஹ் யூசுப் (ரஹ்) அவர்கள்

**எல்லாப்புகழும்** *அல்லாஹ்வுக்கே!*

அவன் விதித்த நியதிப்படியே அத்தனை காரியங்களும் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. அவனுடைய விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடந்துவிட முடியாது. இது முஸ்லிம்களாகிய எங்களது அசைக்க முடியாத நம்பிக்கை.

அந்த வகையில்தான் ஷெய்ஹ் அவர்களுடைய திடீர் மறைவையும் நாங்கள் பார்க்கவேண்டியிருக்கின்றது.

சற்றும் எதிர்பார்க்காத வகையில் அன்னாருடைய வபாத் செய்தி கேள்விப்பட்டதும் பேரதிர்ச்சியடைந்தோம். சுமையா மகளிர் அரபுக் கல்லூரிக்கு நாம் செல்லும் பெரும்பாலான வேளைகளில் அங்கே அவரைக் காணக்கிடைக்கும். அங்கு அமர்ந்து கல்லூரியின் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருப்பார். சுமையாவின் வளர்ச்சிக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றால் அது மிகையல்ல. கல்லூரியின் இஸ்தாபக உறுப்பினரான இவர், அதனை மிகவும் நேசிக்கக் கூடியவராக இருந்தார். ஆசிரியர்கள், மாணவிகள் பெற்றோர்கள், தொழிலாளர்கள் போன்ற அனைவருடனும் மிகவும் அன்பாகவும் ஆதரவுடனும் பழகும் வழக்கமுடையவர்கள் குறிப்பாக மாணவியர்கள் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கவேண்டி ஏற்படின், அம்மாணவியருடைய பெற்றார் வந்து பொறுப்பேற்றுக் கொள்ளும்வரை அவர்களை மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொள்வார்கள். பணிவு, அன்பு, தயாளகுணம் இரக்கம் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளால் மாணவியருடைய உள்ளங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்டவர்கள். சதாவும் அவர்கள் இவர்களுக்காகப் பிரார்த்திப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் ஏழில் நான் கற்றுக் கொண்டிருந்தபோது யூசுப் ஹஸரத் (ரஹ்) அவர்கள் எனக்கு அறிமுகமானார்கள். இஸ்லாம் பாடம் போதிப்பதற்காக எங்கள் வகுப்புக்கு வருகை தந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் இனம்புரியாத அன்பும் மரியாதையும் என் மனதில் ஏற்பட்டது இன்றும் எனக்கு ஞாபகமிருக்கின்றது. எனக்குமாத்திரமல்லாது சக மாணவர்களுக்கும் அவ்வாறுதான் இருந்தது. புன்முறுவல் பூத்த முகம் பணிவான நடத்தை போன்றன அவர்களிடம் காணப்பட்டதனால் அவ்வாறான பதிவு எங்கள் மனங்களில் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

ஷெய்ஹ் அவர்கள் மார்க்கத்தைக் கற்றறிந்த ஆலிம் ஆவார்கள். அல்குர்ஆன் அல் ஹதீஸ் போன்ற மூலாதாரங்களில் கூறப்பட்டுள்ள வகையிலேயே நாம் செய்கின்ற கிரியைகள் அமைய வேண்டும் என்ற விசயத்தில் மிகவும் அக்கறையோடு இருந்தார்கள்.

சமூகசேவையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு தயங்கவில்லை. பாடசாலை அதிபராகச் செயற்பட்ட காலங்களிலே பாடசாலையை முன்னேற்ற அரும்பாடுபட்டார்கள். அல் அக்தாப் வித்தியலயம் உருவானதே அல்லாஹ்வின் உதவியுடன் இவர்கள் முயற்சியினால்தான். மத்திய சபையில் கடமைபுரிந்து சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்துவைக்க முயற்சித்திருக்கின்றார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரது நற்கிரியைகளை அங்கீகரித்து அருள்பாலிப்பானாக. பாவங்கள் இருப்பின் அவற்றை கருணை கொண்டு மன்னித்து மேலான ஜன்னதுல் பிர்தௌசை அவர்களுக்கு வழங்குவானாக.

**வ ஆஹிரு தஃவானா அனில்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எஸ்.எம் ஷரீப்**

தலைவர் சுமையா அரபுக் கல்லூரி

# மனித நேயமிக்க மாமனிதர் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள்

**ஒரு** மனிதன் பலராலும் பாராட்டிப் புகழப்படுவதற்கும் நேசிக்கப்படுவதற்கும் அவன் பெற்றிருக்கும் செல்வம், கல்வி, விஷேட திறமைகள் என்பனவற்றுடன் அவனிடம் காணப்படும் மனித விழுமியப் பண்புகளும் காரணமாக அமையலாம். இவை இம்மையில் மாத்திரமன்றி அவன் மறுமையிலும் இன்புற்று வாழ வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஒருவர் தான் பெற்ற கல்வியை தலைக்கேற்றி விடாமல் பாதுகாத்து அதனைச் சமூக மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தினால் அவர் இறவாப் புகழை அடைந்து கொள்வார். அவரைப் பற்றி சமூகம் பேசிக் கொண்டேயிருக்கும். தன்னுழைப்பால் உயர்ந்த செல்வந்தர் கொடை வள்ளலாகும்போது அவரது வள்ளலற்றன்மை ஒரு சமூகத்தின் பேசு பொருளாக மாறி விடுகின்றது.

இவ்வாறே உயர்ந்த மனித விழுமியங்கள் ஒருவரிடம் நிறைந்து காணப்படுமாயின் அவர் மறைந்தாலும் அப்பண்புகளால் அவர் என்றும் பேசப்படுவார்.

கடந்த 30 வருடங்களாக கிண்ணியா மத்திய கல்லூரியிலும், சுமையா மகளிர் அரபுக் கல்லூரியிலும் நான் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களுடன் மிக நெருக்கமான உறவையும் நட்பையும் கொண்டிருந்தேன். மர்ஹூம் யூசுப் மௌலவியவர்கள் பலராலும் நேசிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுவதற்கு அவரிடம் காணப்பட்ட சிறந்த குணமான மனித நேயமே காரணமாகும்.

மனித நேயமென்பது காந்த சக்திக்கு ஒப்பானதாகும். காந்தம் இரும்புகளையும் இரும்புத் துகள்களையும் கவர்ந்திழுப்பது போல ஒரு மனித நேயமுள்ள மனிதனிடம் அனைவரும் ஈர்க்கப்படுவார்கள்.

மௌலவியவர்கள் அன்பின் இருப்பிடமாகத் திகழ்ந்தார்கள். பிறருடன் அன்பாகவும், கனிவாகவும் நடந்து கொள்ளல், பிற மனிதருக்கு மதிப்பளித்தல், வாக்குவாதங்களைத் தவிர்த்தல், விட்டுக்கொடுத்தல், இரக்கம் காட்டுதல் போன்ற விழுமியங்கள் பல மௌலவியர்களிடம் மேலோங்கிக் காணப்பட்டதனால் அவர்கள் அனைவராலும் நேசிக்கப்பட்டார்கள். அவர்கள் அன்பென்னும் பரந்த விருட்சமாகக் காணப்பட்டார்கள்.

யூசுப் மௌலவியவர்களிடம் காணப்பட்ட மற்றுமொரு பண்பு வாய்மையாகும். சமூகத்தில் "பொய்யன்" என்ற பெயர் கேட்காத மனிதர்களுள் மர்ஹூம் யூசுப் மௌலவியும் ஒருவராவார். விளையாட்டுக்குக் கூட பொய் பேசுவதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூடாதெனக் கூறிச் சென்றுள்ளார்கள். எனது அனுபவத்தில் மௌலவியவர்கள் விளையாட்டாகக்கூட பொய் பேசியதை நான் கேட்டதில்லை. அதிகமாகப் பொது நிருவாகங்களைக் கையாள்பவர்களிடம் வாய்மை இருப்பதில்லை. தம்மைப் பாதுகாத்துக்கொள்ள பொய்யை தமக்குக் கேடயமாக ஆக்கிக் கொள்வார்கள்.

யூசுப் மௌலவியவர்கள் மரணிக்கும் வரை சுமையாவில் நிதி நிருவாகத்திற்குப் பொறுப்பு வகித்தார்கள். இக்காலப் பகுதியில் பல விமர்சனத்திற்கு ஆளானபோதிலும் அவர்கள் வாய்மை என்னும் கேடயத்தையே பயன்படுத்தினார்கள்.

பெரும்பாலான மனிதர்களிடம் காணப்படாத அதிசயிக்கதக்க ஒரு பண்பை யூசுப் மௌலவியிடம் காணக்கூடியதாக இருந்தது. நபிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகம் (ஸல்) அவர்களை விளித்து அல்குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ் "நபியே நீர் கோபிக்காதே கோபித்தால் உம்மை விட்டும் அனைவரும் பிரிந்து சென்று விடுவார்." எனக் கூறுகின்றான். இக்கூற்றை அப்படியே கடைப்பிடித்தவராக மர்ஹூம் யூசுப் மௌலவியவர்கள் காணப்பட்டார்கள். அவரோடு நான் பழகிய காலமுதல் எச்சந்தர்ப்பத்திலும் கோபித்ததை நான் காணவில்லை. சுமையாவில் சில சந்தர்ப்பங்களில் அவர் மீது சிலர் கோபித்துச் சீறிப் பாய்ந்ததுண்டு. அவ்வேளைகளில் அவர்கள் முக சுபாவம் கூட மாறாமல் சிரித்த முகத்துடன் பதிலளித்த பாங்கினை எப்படிக் கூறுவதென்று தெரியவில்லை. மிகப் பெரிய மனிதர்களிடம் காணப்படும் பண்புதான் கோபிக்காமை.

பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடேறுவார் என்பது ஒரு பழமொழி. யூசுப் மௌலவி போன்ற மனிதர்களால்தான் இந்தப் பழமெழி தோன்றியிருக்க வேண்டும். எவரிடம் கோபம் இல்லையோ அவர் பொறுமையாளருக்கு உதாரணமாகிவிடுவார். பொறுமைக்கும் எல்லை உண்டு என்பார்கள், ஆனால் யூசுப் மௌலவியவர்களின் பொறுமைக்கு எல்லையே கிடையாது. இப்பொறுமையின் காரணத் தால்தான் அவர் கோபத்தைத் தவிர்த்து வாழ்ந்தார்.

யூசுப் மௌலவியவர்களிடம் தியாக உணர்வுமேலோங்கிக் காணப் பட்டது. இதனால் அவர் ஒரு கடமை வீரராகக் காணப்பட்டார். கிண்ணியா மத்திய கல்லூரியில் அவர் கற்பிக்கின்ற காலமுதல் சுமையா வரை அவதானித்தபோது தனது கடமையைப் மிகப் பொறுப்புணர்வுடன் செய்துவந்துள்ளார்கள். தன்னிடம் ஒப்படைத்த கடமையை முறையாகச் செய்ய எத்தியாகத்தை செய்யவும் மௌலவி அவர்கள் தயங்கியதில்லை. கல்லூரியின் முன்னாள் தலைவர் மர்ஹூம் இஸ்ஹாக் சேர் அவர்களைப் போன்று சுமையாவுக்காகப் பல தியாகங்களை செய்துள்ளார்கள்.

சுமையா மாணவிகள் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று காலையே சாப்பாட்டு பொதியுடன் பார்வையிடச் சென்று விடுவார்கள். மத்ரஸாவில் ஏதும் பிரச்சினையாக இருந்தால் நடுநிசியிலும் அங்கு சென்று விடுவார்கள்.

மௌலவியவர்களின் தியாகத்திற்கு அக்தாப் வித்தியாலயம் ஓர் உதாரணமாகும். மர்ஹூம் ஏ.எல். அப்துல் மஜீது அவர்கள் றஹ்மானிய்யாவின் தென் பகுதியில் வாவன் காட்டு வளவில் அப்பகுதிப் பிள்ளைகளின் நலக் கருதி ஆரம்பப் பாடசாலை அமைக்க பெரும் முயற்சியெடுத்தார். மர்ஹூம் T.A.M. இஸ்ஹாக் சேர் அவர்களும் அவர் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருக்கும்போது எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. அரசியல் வாதிகளாலும் கல்வி அதிகாரிகளாலும் முடியாதவற்றை மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் பல தியாகங்களைச் செய்து அக்தாப் வித்தியாலயத்தை தோற்றுவித்தமை பெரும் சாதனையென்றுதான் கூற வேண்டும்.

மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களின் மரணச் செய்தியை கேட்டவுடன் மேற்குறிப்பிட்ட அவர்களது நற்பண்புகளில் எதையாவது ஒன்றைக்கூறி யாஅல்லாஹ் யூசுப் மௌலவிக்கு பிர்தௌஸ் என்னும் மேலான சொர்க்கத்தை வழங்குவாயாக என்று என் கண் முன்னே பலர் பிரார்த்தனை புரிந்ததை காணக்கூடியதாக இருந்தது. இதற்கு சுமையா, அல்-அக்தாப் ஆகிய இரு கல்வி நிறுவனங்களும் சாட்சியாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

யாரிடமும் ஒருங்கே காணப்படாத பல உயர் பண்புகளைச் சுமந்து எமக்கெல்லாம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிச் சென்ற மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களுக்கு கப்ருடைய வாழ்க்கையை சொர்க்கப் பூங்காவாக மாற்றி மஹ்ஸர் வெளியிலே அல்லாஹ் அவர்களுக்கு குளிர்ச்சி தரும் நிழலையும் வழங்கி விசாரணையின்றி ஜன்னத்துல் பிர்தௌஸையும் வழங்கிட பிரார்த்திப்போம். நபி பெருமானார் (ஸல்) அவர்களின் ஸபாத்தயையும் பெற வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக ஆமீன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏ.ஏல்.எம். நளிப் (மூத்த மருமகன்)**

அதிபர்
தி/கிண்/அப்துல் மஜித் வித்தியாலயம்
கிண்ணியா

**திருமகனைப் பற்றி மருமகன் மனம் திறந்து....**

# இறைவன் கொடுத்த வரம்

"**மனைவி** அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பர். என்னிடம் கேட்டால் மாமனார் அமைவதும் இறைவன் கொடுத்த வரம் என்பேன். ஆம்! நல்லொழுக்க நற்குணங்களில் உறைவிடமாய் எனது மாமனார் அல்ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் இருந்ததால் தான் தரம் குன்றாத தாரம் வரமாகக் எனக்கு கிடைத்தது. தனக்கு கிடைத்த மருமகன்களுக்கு ஒரு நொந்த வார்த்தை பேசியதில்லை. மாறாக மனம் நொந்த நேரங்களில் உள்ளங்களுக்கு மருந்தாய் அவர் பேச்சு அமையும். அவரிடம்தான் எத்தனை பொறுமை? எத்தனை பக்குவம்? எத்தனை தூரநோக்கு? எத்தனை அனுபவம்? தீர்க்கமுடியாத பிரச்சினைகளும் அவர் அணுகுதலால் தீர்ந்து போகும். இந்த அனுவப, அறிவு முதிர்ச்சி அவருக்கு இறைவன் கொடுத்த வரம். எல்லோரும் பிரச்சினைகளைப் பேசித்தான் தீர்ப்பார்கள், இவரோ சில பிரச்சினைகளை தன்மௌனம் கொண்டே தீர்ப்பதைக் கண்டு பல சந்தர்ப்பங்களில் நான் வியந்திருக்கின்றேன்.

உறவினர்களும், நண்பர்களும் என்னிடம் நீ எங்கு திருமணம் செய்தாய்? என்று கேட்டபோது நான் யூசுப் மௌலவியின் "மூத்த மகளை" என்றதும் அவர்கள் யாவரின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தை "ஒரு நல்ல மனிதனின் மகளை நீ முடித்திருக்கிறாய்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதாகத்தான் இருந்தது. அன்று அதுவொரு சாதாரண வார்த்தை யாகப்பட்டது. ஆனால் இரு தசாப்தங்களையும் கடந்து நான் அவரோடு கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தபோதும் அவரோடு பல பயணங்களில் கலந்து கொண்ட போதும் அவ்வார்த்தை எவ்வளவு கணதியானது என்பதை உணர்ந்தேன்.

உள்ளூரில் மட்டுமல்ல வெளியூரிலும் எனது மாமனார் தனது அன்பாலும் பண்பாலும் எத்தனை நல்லோர்களைச் சம்பாதித்துள் ளார் என்பதை அவரோடு சேர்ந்து. கண்டி, மாத்தறை, புஸல்லாவ, வெலம்பபொட, புத்தளம், கற்பிட்டி ஆகிய இடங்களுக்குச் சென்ற போதுதான் கண்ணுற்றேன். 2020 ஒக்டோபர் 04 இல் இறையடி யெய்திய எனது மாமனார் எனது தந்தையான அப்துல் லெத்திபுக்கு சம்மந்தர் மட்டுமல்ல சொந்த மச்சானும் இணை பிரியாத நண்பருமாவார். தான் மரணித்து "ஓர் இருபது நாட்களில் தன் பிரிவால் தவிக்கும் குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் ஆறுதல் கூறிவிட்டு, என்னருகில் வந்துவிடு" என எனது தந்தையுடன் ஏதும் ஆத்மார்த்த ரீதியான ஒப்பந்தம் செய்தாரோ என்னவோ அல்லாஹ்வும் அதனை ஆமீனாக ஆக்கினானோ என்னவோ? 2020 ஒப்டோபர் 24 ஆம் திகதி எனது தந்தையும் அவ்வாறே தனது நண்பனைத் தேடி அவருக்கருகிலே சென்று அடக்கமாவிட்டார். இருவருக்கும் இன்னாலில்லாஹி வஇன்னாயிலைஹி ராஜிஊன்.

ஒக்டோபர் மாதம் எனக்கு "கறுப்பு ஒக்டோபராகத்தான் தோன்றி யது" எனது மாமனார் மரணத்தின்போது வந்து குவிந்த உள்ளூர் வெளியூர் மக்கள் கூட்டத்தைப் பார்த்தபோது அவரை எண்ணி பெருமைப்பட்டுக்கொண்டேன். என் மனைவி பிள்ளைகளை என்னை விடவும் பாசத்தோடு வளர்த்தவர் அவரே. இன்று கலங்கரை விளக்கமில்லா கடலில் கப்பல்களானோம் நாம்.

பொதுப்பணிகளில் ஈடுபடுவோர் "யதார்த்தவாதி வெகுசன விரோதி" என்பதற்கமைய மக்களை பகைக்க வேண்டி வரும் அவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையெனின் பொதுப்பணிகளில் ஈடுபடாதிருத்தல் வேண்டும். ஆனால் பொதுப் பணிகளில் சிறப்பாக ஈடுபட்டுக்கொண்டே மக்களையும் பகைக்காத அந்த லாவகம் எனது மாமனாருக்கு மத்திரமே உரித்தானது. ஆயிரத்தெட்டுப் பொதுப் பிரச்சினைகளுடன் ஒவ்வொரு நாளும் வீடு வரும் இவர் ஒரு நாள் கூட வீட்டில் உள்ளோருடன் கடிந்து பேசியதில்லை என்பது அவரது இன்னொரு சிறப்பம்ச மாகும்.

இன்று என் பிள்ளைகள் தாய்வழி, மூத்தவழி காட்டியும், தந்தைவழி மூத்த வழி காட்டியும் இன்றி தவிக்கின்றனர். இந்த இடைவெளியை நான் மனைவி பிள்ளைகள் எவ்வாறு ஈடு செய்வோமா? இறைவன்தான் அருள்புரிய வேண்டும் இரண்டு மர்ஹூம்களும் எனக்கு தந்தை யாகவும் மாமனாராகவும் கிடைக்கப்பெற்றது இறைவன் தந்த வரமே.

இதை வாசிக்கின்றபோது அவர்கள் இருவருக்கும் உயர்வான சுவர்க்கம் கிடைக்க இருகரமேந்தி அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாரும் இந்த இடைவெளியை ஈடுசெய்ய அவர்கள் குடும்பத்தாருக்கும் பிரார்த்திக் குமாரும் அன்பாக வேண்டுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வீ.எம். அப்துல் கபூர் மௌலவி**

உபதலைவர் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி

# யூசுப் மௌலவியும் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியும்

**வரலாறுகள்** தான் எமது பிற்கால சமூகத்தை, சந்ததிகளை உயிர்ப்பிக்கும். அந்த வகையில் சுமையாவின் வரலாற்றோடு இணைந்தவர்களை அடையாளப்படுத்தி அதன் உயர்ந்த முன்னேற்றத்திற்கு வழிசமைக்க வேண்டிய பொறுப்புக்கள் அதைச் சார்ந்த அனைவருக்கும் உண்டு.

யூசுப் மௌலவி அவர்கள் என்னுடன் சிறு வயதுப் பழக்கம். கற்றலிலும் ஸஹ்திய்யா அரபுக் கல்லூரியிலும் ஒன்றாகவே அரபுக் கல்வியைக் கற்றோம். சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியிலும் இணைந்திருந்தோம்.

சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியின் ஆரம்ப காலம்தொட்டே மர்ஹூம்களான எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானா, ரீ.ஏ.எம். இஸ்ஹாக் சேர் மற்றும் ஏ.சீ.எம். இஸ்ஹாக் மௌலவி அவர்களுடன் இணைந்து யூசுப் மௌலவி அவர்களும் பல்வேறு வழிகளில் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியின் உருவாக்கத்திற்கு துணை நின்றார்கள். அதனை

- காணியைப் பெற்றுக் கொள்வதில்
- நிதியைப் பெற்றுக் கொள்வதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்டடம் கட்டப்படுவதில்
- மாணவர்களின் வளத்தை உருவாக்குவதில்
- அவர்களுக்கு சிறந்த ஆசான்களைத் தேர்வதில்
- நிருவாக செயற்பாட்டில் என

அவரது பங்களிப்புகள் விரிவாக அமைந்தன. பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து இஸ்ஹாக் சேருடன் இரவு பகலென சுமையா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு கால நேரத்தை அர்ப்பணம் செய்வதில் யூசுப் மௌலவியின் பங்கு பெரிதானதே.

2009 - 2010 வரையாக காலப்பகுதியில் அதிபராகவும் பின்னர் இணைச் செயலாளராகவும் நிருவாக அமைப்பிலே யூசுப் மௌலவி இருந்தார்கள். 40 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைகளை இந்தக் கல்லூரிக்கு செய்துள்ளார்கள்.

தூர இடங்களில் இருந்து சுமையா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு வரும் பெற்றோர்களை தனது வீட்டிலேயே எந்தச் சிரமமும் பாராது தங்க வைத்து உபசரித்து அனுப்பக் கூடிய உளப்பாங்கு கொண்டவராக யூசுப் மௌலவி காணப்பட்டார்.

அவரின் செயற்பாடுகள் எல்லாம் பொறுமை மிக்கதாக இருந்தது. இன்று அது சுமையா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு பெறுமதிமிக்கதாய் அமைந்துள்ளது.

யூசுப் மௌலவி அவர்கள் சமூக சிந்தனை கொண்ட ஆளுமைமிக்கவராகத் திகழ்ந்தார். அதனால்தான் தனியானதொரு பாடசாலை உருவாக்குதல், பள்ளிவாயல் தலைமைத்துவத்தை ஏற்றல், காதி நீதிமன்ற ஜூரியாக இருத்தல். ஜம்இய்யத்துல் உலமா சபை செயலாளராக, பொருளாளராக இருத்தல், மத்திய சபை உறுப்பினராகவும், மத்திய சபை உறுப்பினருக்கான சமாதான நீதவானாகவும், பள்ளிவாசல் சமாஜங்களின் உறுப்பினராகவும் என பல்வேறு அமைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களில் தனது பதவிகளிலும் சேவைகளிலும் இருந்தபோதும் அவர் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. மென்மையான உள்ளம் கொண்டவராக இருந்தார்.

இஸ்ஹாக் சேரின் நினைவுகள் வரும்போதெல்லாம் அழக்கூடியவராக யூசுப் மௌலவி அவர்கள் காணப்பட்டார்கள். காரணம் அந்த அளவுக்கு இஸ்ஹாக் சேரின் தியாகத் தன்மை, சேவைகள் அமைந்திருந்தன. தங்களது கண்கள் போலவே சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியை வழிநடத்தினார்கள்.

இன்று யூசுப் மௌலவி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். மாஷா அல்லாஹ் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியை இன்று தாங்கிக் கொள்வதற்கு பலர் உள்ளனர். அவர்களுக்கும் கல்லூரியின் வளர்ச்சிக்கும் அல்லாஹ் துணைபுரிவானாக. மேலும் யூசுப் மௌலவி அவர்களின் சேவைகளை பொருந்திக் கொண்டு அல்லாஹ் மேலான சுவனத்தை அவருக்கு கொடுத்தருள்வானாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.எம். கஸ்புள்ளா
B.Lit. Tamil

# ஈச்சந்தீவிலிருந்து தொடங்கிய பயணம்

**முத்தலிபு**-ஆசியத்தும்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1948.01.16 இல் ஈச்சந்தீவில் யூசுப் மௌலவி அவர்கள் பிறந்தார். கல்வி கற்கும் பருவம் வந்ததும் தனது ஆரம்பக் கல்வியை ஈச்சந்தீவு விபுலானந்தா பாடசாலையில் கற்றார். பின் தந்தையின் விருப்பத்திற்கிணங்க மார்க்கக் கல்வியைக் கற்றிட நகர பாடசாலையை நாடி கிண்ணியாவுக்கு வருகைதந்து அவரது உறவினர் வீட்டில் தங்கி இரு கல்வியையும் தொடர்ந்தார். றஹ்மானிய்யா அரபுக் கல்லூரியில் மார்க்கக் கல்வியை கற்று உலகக் கல்வி தி/கிண்/அல்-அக்ஸா கல்லூரியிலும் கற்றார். மௌலவியாக பட்டம்பெற்று வெளியாகிய காலமது. திருமண வயதை நெருங்க கட்டையாறு வீதி, கிண்ணியா - 02 இல் வசிக்கும் அஹமது லெப்பை ஹாஜியாரின் மகள் ஐனூன் ஜாரியாவை திருமணம் செய்தார். நான்கு பெண் பிள்ளைகளும் ஓர் ஆண் குழந்தையுமாக ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையானார். ஐந்து பிள்ளைகளையும் கற்க வைத்து இன்று நான்கு பெண் குழந்தைகளும் ஆசிரியைகளாகவும் தந்தை விட்டுச் சென்ற ஆசிரியப் பணியை செய்து வருகின்றனர்.

மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் ஐந்து பிள்ளைகளையும் திருமணம் முடித்துக் கொடுத்து அவர்களது பேரப் பிள்ளைகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தெடுப்பதில் தனது கால நேரத்தை செலவு செய்தார். இது அவரது தனிப்பட்ட வாழ்வில் கண்ட வெற்றியாகக் கூறலாம்.

## அரச நியமனம்

மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் தனது முதல் நியமனமாக ஆலங்கேணியில் **1972** ஆம் ஆண்டு உப தபால் அதிபராக கடமையை ஏற்றார். பின் காலம் கடந்து செல்ல அவருக்கு மௌலவி ஆசிரியர் நியமனம் **1973.06.13** இல் கிடைத்தது.

- கச்சக்கொடுத்தீவு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில், தற்போது தி/கிண்ணியா அந்-நஜாத் வித்தியாலயம் **(1973.06.13 - 1977.08.05)**
- கல்லடி வெட்டுவான் புஹாரி நகர் அ.க.மு. பாடசாலை, **(1977.08.06 - 1978.01.16)**
- பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயம் **(1978.01.17 - 1979.02.16)**
- பெரியாற்றுமுனை முஸ்லிம் வித்தியாலயம் **(1979.02.17 - 1979.02.25 )**
- **G.T.C.** அட்டாளைச்சேனை **(1979.02.26 - 1980.12.31)**
- தி/கிண்/அல்-அக்ஸா மகா வித்தியாலயம் **(1981.01.01 - 1981.12.31)**
- அம்பாறை தமிழ் வித்தியாலயம் **(1982.01.01 - 1982.02.16)**
- தி/கிண்ணியா மத்திய கல்லூரி **(1982.02.17 - 1997.03.01)**

## ஆசிரியப் பணி

**1979** இல் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சிக்குத் தேர்வாகி இரண்டு வருட ஆசிரியப் பயிற்சியின் பின் பயிற்றப்பட்ட ஆசிரியராக தி/கிண்ணியா அல்-அக்ஸா கல்லூரிக்கும் பின்னர் **1982.02.15** இல் தி/கிண்/மத்திய கல்லூரிக்கும் நியமிக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1988, 1989 1990, 1991** காலப்பகுதிகளில் கிண்ணியா மத்திய கல்லூரியில் மாணவர்கள் கல்விப் பொதுத் தாராத சதாரண தரத்திலும் உயர் தரத்திலும் அதிதிறமைச் சித்தி, விசேட சித்திகள் பெற காரணமாக இருந்தார். மேலும் மாணவர்களை மத அறிவுப் போட்டிகளிலும் **1995** இல் கலந்து வெற்றிபெறச் செய்துள்ளார். இதன் காரணமாக அன்றைய கல்விப் பணிப்பாளர் றசீது அவர்களால் பாராட்டப்பட்டார். கிண்ணியா மத்திய கல்லூரியில் கற்பிக்கும் காலத்திலே பிரதி அதிபராகவும் தனது கடமையைச் செய்தார்.

- மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் கிண்ணியாவில் இரண்டு பெரும் சொத்துக்கள் உருவாக காரணமாக இருந்து சென்றுள்ளார்கள்.

  1. தி/கிண்ணியா அல்-அக்தாப் வித்தியாலயம்
  2. கிண்ணியா சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி

## பாடசாலையின் உருவாக்கம் மற்றும் தலைமைத்துவம்

பாடசாலை இல்லாத சூழல் ஒன்றில் பாடசாலையொன்றை அமைக்க வேண்டும் என்ற மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களின் எண்ணக்கரு நிறைவேறியது. றஹ்மானிய்யா நகரில் கடல் அருகில் அழகாக அமைந்திருக்கும் அல்-அக்தாப் வித்தியாலயம் தனது முழு முயற்சியின் காரணமாக **1997** இல் உருவாக்கப்பட்டது.

இப்பாடசாலையை அமைக்க அப்பிரதேசத்தில் வாழும் அக்தாப் என்பவர் பாடசாலைக்கு காணி நன்கொடையாக வழங்கினார். அவரின் பெயரிலேயே இன்றும் இப்பாடசாலை இயங்கி வருகிறது. ஆரம்பத்தில் குடிசையில் அமைந்த அல்-அக்தாப் வித்தியாலயத்தை மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களின் தனி முயற்சியின் காரணமாக கட்டடம் அமையப்பெற்றது. சுனாமி காலங்களில் கூட பாடசாலை நடைபெறாது இருந்தபோது மாணவர்களின் கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை பாதிக்கப்படும் என்ற எண்ணத்தில் தனது வீட்டையே பாடசாலையாக மாற்றியமைத்து மாணவர்களுக்கு கல்வியைக் கொடுத்த பெருமையைப் பெற்றவர்.

மேலும் **1973** டிசம்பர் **22** ஆம் திகதி கல்வி அமைச்சின் தமிழ் பிரிவும் இலங்கை அரபு ஆசிரியர் சங்கமும் இணைந்து கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் நடாத்திய அகில இலங்கை அரபு ஆசிரியர்களுக்கான பயிற்சி கருத்தரங்கில் கலந்துகொண்டார்.

திருகோணமலை கல்வி அலுவலகம் நடாத்திய அரபு ஆசிரியர்களுக்கான புத்தூக்க வகுப்பில் **1974** இல் கலந்து மற்றும் பல்வேறு சேவைக் கால பயிற்சிகளிலும் கலந்து தனது அறிவினை வளர்த்துள்ளமை போற்றத்தக்க விடயமாகும்.

தொடர்ச்சியாக பிராந்திய கல்வித் திணைக்களம் திருகோணமலை **1993** இல் ஏற்பாடு செய்த இஸ்லாம் பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு செயலமர்விலும் கலந்து தனது அறிவை மேம்படுத்திக் கொண்டார்.

தனது ஆசிரியர் சேவையை தரம் உயர்த்திக் கொள்ள சேவையில் இருக்கும் காலத்திலேயே **1993** இல் பாடசாலை திட்டமிடல் மற்றும் பாடசாலை முகாமைத்துவம் சம்மந்தமான வதிவிட செயலமர்வு பயிற்சியில் கல்வி உயர் கல்வி அமைச்சின் பத்தரமுல்லையின் கலந்து கொண்டு தனது அறிவினை விருத்தி செய்தார். அது போலவே வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்த கல்வி முகாமைத்துவ பயிற்சி நெறியில் **1995** இல் கலந்து கொண்டார்.

ஆசிரியராகவும் அதிபராகவும் **36** வருடங்கள் கடமை புரிந்துள்ளார். **1997 - 2008** வரை அல்-அக்தாப் வித்தியாலயத்தில் முதல் அதிபராக சேவையை தொடர்ந்தார்.

**2000.06.04** ஆம் திகதி அதிபர் சேவை II ஆம் வகுப்பின் தரம் **2** க்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவையின் பணிப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரைக்கமைய அதிபராக நியமிக்கப்பட்டார். ஓய்வு பெறும் வரை அல்-அக்தாப் வித்தியாலத்திலேயே அதிபராக இருந்தார். அவரிடம் கற்ற மாணவர்கள் இன்று பல்வேறு அரச தொழில்களியே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமூக சேவைகள்

நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் காதி நீதிமன்ற ஜூரியாக 2005 - 2008 வரை பல்வேறு வழக்குகளுக்கு இணக்கம் கண்டுள்ளார்கள். மேலும் 2009 - 2016 வரை மத்திய சபை உறுப்பினராக இருந்து காணிப் பிரச்சினை மற்றும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு மத்திஸ்தம் வகித்து தமது சேவையை செய்துள்ளார். தான் மரணிக்கும் வரை மத்தியஸ்த சபையிலும் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியிலும் தனது சேவையை செய்துவிட்டுச் சென்றுள்ளார். கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா சபையில் கிட்டத்தட்ட 35 வருடங்களாக செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்து தனது கடமைகளை சமூகத்துக்காக செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யூசுப் மௌலவி அவர்களுடன் கூடப் பிறந்தவர்கள்

1. முத்தலிபு சதக்கு லெப்பை
2. முத்தலிபு உம்பு ஹபீபா
3. முத்தலிபு பளீலா உம்மா
4. முத்தலிபு பாத்திமா வீவி

### பிள்ளைகளை திருமணம் முடித்துக் கொடுத்ததன் மூலம் கொண்ட உறவுகள்

1. A.R. அப்துல் லெத்தீப் (ஹிஜ்ரா வீதி, கிண்ணியா - 3)
2. K.M. அப்துல் மனாப் (ரஹ்மானியா நகர், கிண்ணியா - 1)
3. S.A. சம்சுதீன் (குறிஞ்சாக்கேணி, கிண்ணியா)
4. M.S. அப்துல் கரீம் (குறிஞ்சாக்கேணி கிண்ணியா)
5. அபூதாஹீர் (மத்திய பள்ளி வீதி, கிண்ணியா - 2)

### சுமையாவின் ஆரம்ப ஸ்தாபகர்கள்

1. மர்ஹூம் S.A.S. இஸ்மாயில் மௌலானா
2. மர்ஹூம் T.A.M. இஸ்ஹாக் சேர்
3. M.M. யூசுப் மௌலவி
4. A.C.M. இஸ்ஹாக் மௌலவி
5. V.M. அப்துல் கபூர் மௌலவி

### சுமையா அரபுக் கல்லூரியின் பிற்காலத்தில் அவருடன் இணைந்தவர்கள்

1. **S.M. Shariff** B.A, (Rtd Principal), Chairman - Sumaiya Arabic Collge
2. **Mou. V.M. Abdul**, Ghafoor (Sahdi), Vice Chairman - Sumaiya Arabic Collge
3. **S.M. Hasan** Bsc, Dip.en.Edu, ADE, Deputy Chairman - Sumaiya Arabic Collge
4. **K. Mohamed Ameen**, (SLTS), Deputy Chairman - Sumaiya Arabic Collge
5. **Mr. M.J.M. Naalir,** B.com, SLACS, Treasurer - Sumaiya Arabic Collge
6. **A.M. Cader** (Rtd. Teacher),Member - Sumaiya Arabic Collge
7. **A.C.L.M. Abdul Rauf** (Rtd. Teacher), Secretary - Sumaiya Arabic Collge
8. **Mou. M.M.Yousuf** (Retaired Principal), Joint Secretary - Sumaiya Arabic Collge
9. **S.A. Abdul Azeez,** (Naleemi B.A. Cey,), Joint Secretary - Sumaiya Arabic Collge
10. **S.M. Shareef,** (Rtd. Asst, Accountant), Memeber - Sumaiya Arabic Collge


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்ஹ் அப்துல் அஸீஸ் (நளீமி)
உதவிக் கணக்காளர், சவூதி தூதரகம்

# எல்லோரது உள்ளங்களையும் கொள்ளை கொண்ட யூசுப் மௌலவி

**2020.10.04** ஆம் திகதி காலை எமது சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் அதிகாலை **6.30** மணி அளவில் கல்லூரியின் உப தலைவராக பதவி உயர்த்தப்பட்டார்கள். அதே நாள் அஸர் தொழுகையின் பின் கல்லூரியின் அதிபரிடமிருந்து யூசுப் மௌலவி வபாத்தாகி விட்டார்கள் என்ற செய்தி எட்டியது. இதுதான் மனிதனின் வாழ்க்கை. எதுவும் நிரந்தரம் கிடையாது. மரணம் என்பது நிச்சயம். வாழ்வு என்பது தற்காலிகம். செல்ல வேண்டிய இடம் கப்ர் என்பதை தெட்டத்தெளிவாக புரிந்த நாள் அது.

இவர் கடைசி மூச்சுவரை கிண்ணியாவில் அமைந்திருக்கின்ற சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியின் மிகச் சிறந்த நிருவாகியாக தன்னை அந்த நிறுவனத்துக்கு கடைசிவரை அர்ப்பணித்தவராக அடுத்த கல்லூரியின் தலைவர் பட்டியலில் வரக்கூடிய தகமை பெற்றவராக மாறிய அன்னார் இறையடி சேர்ந்திருக்கிறார்கள். நாம் யாரையும் தூய்மைப்படுத்தி சுவனம் போய்விட்டார் என்று தீர்ப்பு கொடுக்க முடியாது அவ்வாறு செய்யவும் கூடாது. ஆனால் இந்த மனிதர் சுயநலன்களுக்கு அப்பால் தன் சொந்த தேவைகளையெல்லாம் மறந்து அரபு கல்லூரிக்காக பொது சேவைக்காக தன்னை அர்ப்பணித்தவர் என்பதை மட்டும் உறுதியாகக் கூற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் பணிவும் மிக்க எல்லா மாணவர்களையும் கவர்ந்து தன் கடமைகளை செய்தவர் என்பது நாம் யாவரும் அறிந்த உண்மை. ஒரு நல்ல ஆசானாக ஒரு நல்ல அதிபராக ஒரு நல்ல நிருவாகியாக வாழ்ந்து தனது தகுதிக்கேற்ற பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றியவர் என்று எங்கள் மனம் சொல்கிறது. பதவி உயர்வும் பெற்று உயர் பதவியைப் பெற இறையடி சென்றிருக்கிறார் என்று மட்டும் சொல்ல முடியும். மறைந்த மர்ஹூம் வைத்துள்ளாஹ் SI அவர்கள் கிண்ணியா மத்திய கல்லூரியில் இவரிடமிருந்து இஸ்லாம் பாடம் கற்றுக் கொண்டிருந்தபோது நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை சொல்வதனூடாக இவர் எந்தளவு நல்ல மனிதனாக வாழ்ந்திருக்கிறார் என்பதை எம்மால் ஊகித்துக்கொள்ள முடியும்.

யூசுப் மௌலவி ஒரு நாள் பாடம் நடாத்திக் கொண்டிருந்தார்கள். அவரது அன்பான பேச்சு இங்கிதமான போக்கு அழகிய வதனம் எல்லாமே காலம் சென்ற வைத்துள்ளாஹ் அவர்களை கவர்ந்திழுத்திருந்தது. வகுப்பறையில் பாடம் கற்பித்துக் கொண்டிருக்கின்ற வேளை உணர்ச்சிவசப்பட்டு தன்னிலை மறந்து யூசுப் மௌலவி அவர்களை கட்டிப்பிடித்து Sir நீங்கள் முஹம்மது நபி மாதிரி இருக்கிறீர்கள்" என்று கூறியமை இவர் எந்தளவு நல்லவராக வாழ்ந்திருக்கிறார் என்பதை தெளிவாக எடுத்தியம்புகின்றது. மரணித்தாலும் தன் நற்பண்புகளால் தான் வாழும் காலத்தில் செய்த சேவைகளால் எங்கள் உள்ளங்களில் வாழ்ந்துகொண்டு மறுமை வரை முறுவலித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நல்லவர் சமூக சேவையாளர் யூசுப் மௌலவி அவர்கள். என்றும் எங்களது பிரார்த்தனைக்கு சொந்தக்காரர்களாகிவிட்டு செல்ல வேண்டிய இடத்துக்கு சென்று விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ. அபுசாலிஹ்
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்

# எனது பார்வையில் மர்ஹூம் யூசுப் மௌலவி

**அளவற்ற** அருளாளன், நிகரற்ற அன்புடையோன், அனைத்தையும் நெறிப்படுத்தி பரிபாலனம் செய்கின்ற வல்லவன், கண்ணியத்திற்குத் தகுதியானவன். அவனது உயர் பெயரால் இதனை எழுதுகின்றேன். அவனுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ். சலவாத்தும் சலாமும் வையகத்தின் இருள் நீக்கி அறிவொளி பரப்பிய இறுதித் தூதர் (ஸல்) மீது சாந்தி உண்டாகட்டும்.

இறைவன் மனிதனுக்குக் கொடுத்தவற்றுள் அழிவற்ற செல்வம் கல்வி. அக்கல்வியின் மூலம் ஒரு முஸ்லிம் மறுமைக்கான நன்மைகளைச் செய்து கொள்வதையே இறைவன் விரும்புகின்றான். கற்றவனுக்கு பல பொறுப்புக்கள் வந்து சேரும். அப்பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டால் அதனைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொண்ட பொறுப்பை இறைவன் அளித்த அமானிதமாகக் கருதி செயற்பட்டவர் தான் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள்.

சின்னக் கிண்ணியாவின் மத்திய பள்ளிவாசல் நிருவாகம் செயற்றிற னற்றுக் காணப்பட்ட போது ஜமாஅத்தினர் 1987 ஆம் ஆண்டு புதிய நிருவாகம் ஒன்றைத் தெரிவுசெய்தார்கள். அவ்வாறு தெரிவுசெய்யப் பட்டவர்களின் சிலரின் பெயர்களே நினைவில் உள்ளது அப்பெயர் களை இங்கு குறிப்பிடுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஜனாப் M.M. யூசுப் மௌலவி - தலைவர்
2. ஜனாப் M.I. அபுசாலிஹூ - செயலாளர்
3. ஜனாப் M.S.H.A. ஹசன் - பொருளாளர்
4. ஜனாப் A.M. ராசிக் - உறுப்பினர்
5. ஜனாப் M.H. சராப்தீன் - உறுப்பினர்
6. S.M. ஹனிபா - உறுப்பினர்

புதிய நிருவாகம் தெரிவுசெய்யப்பட்ட காலப்பகுதியில் கிண்ணியாவில் பல பள்ளிவாயல்கள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்த தலைவர், நாமும் நமது பள்ளியை புனர்நிர்மாணம் செய்து மாடியாகக் கட்டினால் வெள்ளிக் கிழமைகளில் ஜூம்ஆத் தொழுகைக்கு இடவசதி கிடைக்கும் என்பதை ஜமாஅத்தினரிடம் கூறியபோது அவர்களும் உடன்பட்டனர்.

ஏற்கனவே இருந்த பழைய கட்டடம் ஜமாஅத்தினரின் சிரமதானத்தின் மூலம் உடைத்து அகற்றப்பட்டது. தலைவரினதும் நிருவாக உறுப்பினர்களினதும் முயற்சியால் தனவந்தர்களின் உதவியோடு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில், அதாவது 1990 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் எமது மஹல்லாவைச் சேர்ந்த ஜனாப் M.I.M. ஜமால்தீன் ஆசிரியர் மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். முதலமைச்சராக திரு.வரதராஜப் பெருமாள் பதவி ஏற்றுக் கொண்டார்.

நிர்வாகத்தினர் மாகாண சபை உறுப்பினரோடு முதலமைச்சரை சந்தித்து பள்ளிவாயல் புனரமைப்பு வேலைகள் பற்றிக் கூறும்போது தனது ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 50,000/- தருவதாக வாக்களித்து வேலைகளைத் தொடர அப்பணத்தொகையை தந்துதவினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் பிரச்சினை உருவாகியதால் திருகோணமலையில் இந்திய இராணுவம் நிலை கொண்டது. இந்திய இராணுவத்துக்கு மாவட்ட பொறுப்பதிகாரியாக வந்தவர் ஜெமீல் முகம்மட். தலைவர் மாகாண சபை உறுப்பினர் மூலம் ஜெமீல் முகம்மட் அவர்களை பள்ளிவாயலுக்கு அழைத்து வந்து வேலைகளைப் பார்வையிட அவர் மாடிக்குத் தேவையான கம்பிகளை அவரே அவர்களுடைய வாகனத்தில் ஏற்றிவந்து தந்துதவினார்.

பள்ளிவாயல் கட்டடவேலைகளோடு நில்லாமல் சமூகச்சீர்கேடுகளையும் நீக்கும் வேலைகளிலும் ஈடுபட எண்ணங் கொண்டனர்.

முதற் கட்டமாக சின்னக்கிண்ணாவில் இயங்கி வந்த மூன்று சினிமாக் கொட்டகைகளையும் நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். பள்ளிவாயல்களின் சமாஜத் தலைவர் மர்ஹூம் T.A.M. இஸ்ஹாக் அவர்களையும் அழைத்துக் கொண்டு சினிமாக் கொட்டகை உரிமையாளர்களை சந்தித்து, சினிமாவினால் சமூகத்திற்கு ஏற்படும் தீங்குகள் பற்றி எடுத்துக் கூறி இச்செயலை நிறுத்தும்படி பலமுறை வேண்டிக்கொண்டோம். ஆரம்பத்தில் மறுத்த அவர்கள் காலப்போக்கில் அவர்களே உணர்ந்து அத்தொழிலை விட்டு நீங்கிக் கொண்டார்கள்.

இரண்டாம் கட்டமாக மது அருந்துபவர்களை தனித்தினயே அவர்களின் வீடுகளுக்குச் சென்று அதனால் விளையும் சீர்கேடுகளையும், தீமைகளையும் எடுத்துக்கூறி குடியை விடும்படி அறிவுறுத்தப்பட்டது. கட்டுப்படாதவர்களுக்கு "ஷரீஆ" சட்ட தண்டனையும் வழங்க தலைவர் யூசுப் மௌலவி அவர்கள் பின்னிற்கவில்லை. அதனால் சிலர் அத்தீய செயலிலிருந்து நீங்கிக்கொண்டார்கள்.

இப்பணிகளைத் தொடர்ந்து புதிதாக இஸ்லாத்தைத் தழுவ விரும்பி வந்தவர்களை இஸ்லாத்தில் இணைக்கவும் தலைவர் தொழிற்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***1992*** ஆம் ஆண்டு கம்பளையைச் சேர்த்த கிறிஸ்தவ வாலிபர் ஒருவரை இஸ்லாத்தில் அவரின் விருப்பப்படி இணைத்து கத்னாவும் செய்து நிருவாகத்தினரே பராமரித்னர். அவருக்கு அப்துர் ரஹீம் என்று பெயர் மாற்றப்பட்டது. தற்போது இவர் ஹஜ்ஜையும் முடித்து, சம்மாந்துறையில் மணம்முடித்துள்ளார். பிள்ளைகளையும் காபில்களாக ஆக்கியுள்ளார். தனியாக சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டுசிறப்பாகஅவர்வாழ்ந்துவருகின்றார். அல்ஹம்துலில்லாஹ்.

இவ்வாறு எடுத்த பொறுப்பை இறை திருப்தியை மாத்திரம் நாடி ***1997*** ஆம் ஆண்டு வரை செய்துள்ளார். இறைவன் அன்னாரின் பாவங்களை மன்னித்து ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்கிட பிராத்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமைக்கும் கிட்டட்டும்!

பேசிடும் போதினில் புன்னகை
பெருகிடும் இதழ்கள் கொண்டீர்
வீசிடும் மெல்லிய தென்றலாய்
வார்த்தைகள் உதிர்த்து நின்றீர்
நேசித்தல் என்னும் பண்பை
நெஞ்சிலே நிறைத்து நின்றீர்

நிழல்தரும் பள்ளிக்கூடம்
நிலையான தர்மமாகும்
தொழுதிட பள்ளிவாசலும் அன்று
தொடங்கிய சேவைகள் எல்லாம்
பழுதிலா நேர்மை என்னும்
பயணத்தில் கண்டீர் வெற்றி !

சமூகத்தின் தேவை கருதி
சயணங்கள் மறந்து நின்றீர்
சுமுகமாய் செயலில் இறங்கி
சங்கடங்கள் தீர்த்து வைத்தீர்
அமைதியின் பாதை வழியே
அழகிய சேவைகள் செய்தீர்

இல்லறம் இனித்திடும் பிள்ளைகளை
ஈன்றெடுத்து கல்வியளித்து
நல்லறமுடன் வளர்த்தெடுத்து
நலமுடன் திருமணம் செயதளித்து
வல்ல அல்லாஹ் துணையால்
வாழ்வில் ஜெயம் பெற்றீர்.

கோபத்தை மறந்து நின்றீர்
கொள்கையில் வாய்மை கொண்டீர்
காலத்தை நேரத்தை மார்க்கக்
கல்விக்காய் செலவிட்டீர்
ஞாலத்தில் பெற்ற நன்மை
நாளந்த மறுமைக்கும் கிட்டட்டுமே!

ஏ.எம். கஸ்புள்ளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்.எஸ். நசுர்தீன்**

(SLPS)

# 'யூசுப்' எனும் ஆளுமை

» தோன்றிற் புகழோடு தோன்றுக
அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று (குறள்)

» புவியில் பிறப்பதாயின் புகழுக்கு ஏதுவான குணங்களோடு பிறக்க வேண்டும். இல்லாவிடின் பிறக்காமல் இருப்பதே நல்லது என்பது வள்ளுவர் வாக்கு

» உலகின் வரலாறு எழுதப்படும்போது "ஒரு மூலையிலாவது உன் பெயர் பதியும் வண்ணம் வாழ்ந்திடு" என்பது கவிப்பேரரசு கண்ணதாசன் வாக்கு.

» "அவர்களுடைய (நபிமார்) வரலாறுகளில் படிப்பினைகள் இருக்கிறது (அல்–குர்ஆன்) என வரலாற்றின் முக்கியத்துவத்தை அல்–குர்ஆன் எமக்கு உணர்த்துகிறது.

» "வரலாறுகளை வாசிப்பது இலகு. ஆனால் வரலாறுகளை உருவாக்குவது கடினம். எனவே வரலாறுகளை உருவாக்க முயற்சிப்போம்" என இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமாக அப்துல் கலாம் கூறியுள்ளார்.

இவ்வாறு பிறப்புக்கும் இறப்புக்குமிடைப்பட்ட தனது குறுகிய காலப்பொழுதில் மனிதப் பிறப்பு ஒரு நிகழ்வாக இருந்தாலும் இறப்பு என்பது ஒரு வரலாறாகவே இருக்க வேண்டும் என்பதே பல அறிஞர்களின் கருத்தாகும்.

அந்த அடிப்படையில் கமுர்தீன் அப்பா என்பவரின் மூத்த மகனான அப்துல் முத்தலிபு என்பவருக்கும் பக்கீர் தம்பி ஆசியத்தும்மா என்பவருக்கும் சிரேஷ்ட புதல்வனாக 1948 இல் ஈச்சந்தீவு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியாவில் பிறந்த எனது சகோதரர் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை ஈச்சந்தீவு, விபுலானந்தாவில் முடித்துக் கொண்ட பின்னர் கிண்ணியா நகரப் பகுதிக்கு எனது பாட்டனர் முகம்மது சுல்தான் (பரப்பர் அப்பா) அவர்களது காதுகாப்பில் அனுப்பப்பட்டார். எனது தாயின் வீடு வதிவிடமாகவும் குஞ்சுத் தம்பி ஹாஜியார் அப்பாவின் வீடு கற்குமிடமாகவும் இருந்து வந்தது.

இவ்வாறு கட்டையாறு, கிண்ணியாவை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்ட இவர் புஹாரி மத்ரஸாவில் மார்க்கக் கல்வியையும், அல்-அக்ஸாவில் இடைநிலைக் கல்வியையும் கற்றுக் கொண்டு உபதலைவராக (Post Master) தனது முதல் அரச தொழிலைப் பெற்றுக் கொண்டதுடன் கமுர்தீன் மூத்த பேரப் பிள்ளை என்ற நாமத்தின் முதல் அரச உத்தியோகத்தர் என்ற முத்திரையையும் பதித்துக் கொண்டார் சகோதரர் யூசுப் மௌலவி.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, தியாகம் என்பவற்றுடன் பொறுமை சகிப்புத்தன்மை போன்ற அரிய குணங்களைக் கொண்ட சகோதரர் யூசுப் மௌலவி அவர்கள் தனக்கென்று ஓரிடத்தை எமது குடும்பத்தில் பெற்றுக் கொண்டார். யூசுப் மௌலவியை 'யூசுப் காக்கா' என எமது குடும்பத்துச் சகோதரர்கள், சகோதரிகள் அழைப்பர்.

எல்லோருடனும் இன்முகத்துடன் மென்மையாகப் பழகும் பண்பு கொண்ட இச்சகோதரர் குடும்பத்தில் மட்டுமல்ல சமூகத்திலும் தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டார். எல்லோர் மனதிலும் 'யூசுப் மௌலவிக்கு' தனி மரியாதை இருக்கவே செய்தது. இவர் பல முதன்மையான பணிகளில் ஈடுபட்டு தனது செயலூக்கம் கொண்ட தலைமைத்துவத்தை நிலைநாட்டியுள்ளார்.

தபாலகர் பதவியை வேறு ஒருவருக்கு விட்டுக் கொடுத்த இவர் ஆசிரியத் தொழிலில் இணைந்து கொண்டார். தனது ஆசிரியர் பயிற்சியை அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரியில் பெற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். தனது பட்டமளிப்பு நிகழ்விற்கு என்னையும் அழைத்துச் சென்று வெளியுலகை எனக்கு சிறிய வயதில் காட்டினார். என்னை சகோதரனாக அன்றி தனது மூத்த மகனாக கருதி வழிநடாத்திய என் சகோதரனை என்றும் மறவேன். ஆரம்ப காலங்களில் தம்பி நீயா! என்று கற்றோர் கேட்டபோதெல்லாம் நான் யூசுப் மௌலவியின் தம்பி என்றும், பீர்முகம்மது மௌலவியின் மருமகன் என்றும் அறிமுகம் செய்தேன். அந்த அடிப்படையில் எனது முன்னோடி யூசுப் நானாவாகும்.

மத்திய கல்லூரியில் O/L வகுப்புகளுக்கு மட்டுமல்லாமல் A/L வகுப்புகளில் ஒரு பாடமாக இஸ்லாம் எடுத்து முதல் இஸ்லாம் பாட ஆசிரியர் என்ற நாமத்தையும் தேடிக் கொண்டார். பின்னர் அல்-அக்தாப் வித்தியாலய முனைப் பகுதியில் அக்தாப் என்பவரிடம் காணி பெற்று அக்காணியைத் திருத்தி அதனை நிறுவி அதன் முதல் அதிபராக இருந்து முன்னோடியாகவும் செயற்பட்டார். தனக்குக் கிடைத்த அதிபர் சேவை தரத்தைக் கூட பெற்றுக்கொள்ளாது விட்டுக்கொடுத்ததுடன் ஆசிரியர் சேவையில் அதிபராகவே இருந்து ஓய்வுபெற்றார்.

அதுமட்டுமல்ல மத்திய பள்ளிவாயலின் தலைவராகச் செயற்பட்ட யூசுப் மௌலவி பழைய கட்டடத்தை உடைத்து மாடிக் கட்டடம் அமைக்கும் முதல் முயற்சியை மேற்கொண்டு முன்னாள் M.P.C ஜனாப் M.I. ஜமால்தீன் அவ்ரகளுடன் இணைந்து **1987** காலப்பகுதியில் இந்தியப் படைத்தளபதி ஜெமில் முகம்மது அவர்கள் மூலம் உதவியைப் பெற்றுக் கொண்டார். முன்னாள் முதல் வட-கிழக்கு முதலமைச்சர் வரதராஜ பெருமாள் அவர்களது உதவியையும் பெறத் தவறவில்லை.

அதுமட்டுமல்ல மர்ஹூம் A.T.M. இஸ்ஹாக் அவர்கள் தமது சேவைக் காலத்தில் **18** பாடசாலைகளை நிறுவியதுடன் சுமையா பெண்கள் அரபுக் கல்லூரியை **1978** இல் நிறுவினார். அதன் துன்பகரமான வரலாற்றில் **1971** ஆம் ஆண்டு முதல் ஸ்தாபக உறுப்பினராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் செயலாளராகவும் இருந்து பல மௌலவியாக்கள் உருவாக உதாரண புருஷராக இருந்து உழைத்த சகோதரர் யூசுப் மௌலவி மரணமடையும் தினத்தன்று சுமையா அரபுக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது அவரது சேவைக்குக் கிடைத்த மற்றொரு சான்றாகும்.

சுமையாவின் ஆரம்பம் முதல் தனது மரணம் வரை சுமையாவின் வளர்ச்சியில் தன்னை இணைத்துக் கொண்ட யூசுப் மௌலவி அவர்கள் என்றும் மறக்க முடியாத ஒரு 'சுவடு' ஆக மாறிவிட்டார்கள்.

"எவரொருவர் ஒரு நாளில் பிறருக்கு ஏதாவது செய்யவில்லையோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல" என்ற நபிமொழிக்கு ஒப்ப தனது ஆயுளில் பல முன்மாதிரியான பணிகளை ஆரம்பித்து செயற்படுத்திய செயல்வீரராக நான் காண்கிறேன். அவரது சமூகப் பணிகளை இறைவன் பொருந்திக் கொள்ளட்டும்.

"யார் ஒரு நன்மையான கருமத்தை வழிகாட்டுகின்றாரோ அவருக்கு அதனைச் செய்பவருக்குரிய கூலியைப் போன்று கூலி வழங்கப்படு கிறது. (முஸ்லிம்) என்ற மற்றுமொரு நபிமொழிக்கு ஒப்பவும் சகோதரர் யூசுப் மௌலவி அவர்கள் தனது 72 வருட ஆயுளில் மற்றவர்கள் பயன்பெறக்கூடிய படிப்பினைகள் என்றும் நினைவூட்டக் கூடிய நற்பணிகள் பலவற்றை சமூகத்திற்கு விட்டுச் சென்றுள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

அவரது நற்பணிகளையும், சமூக நலத்திட்டங்களையும் வழிகாட்டல் களையும், முன்மாதிரிகளையும் இறைவன் ஏற்று அவருக்குரிய கூலியை மறுமையில் இறைவன் வழங்குவானாக. ஆமின்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்.ஐ. றஹ்மத்துல்லாஹ்**
உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்

# குடும்ப உறவைப் பேணும் உத்தமர்

**2020.10.04** ஆந் திகதி மதிய உணவை உட்கொண்ட பின், நான் சற்று உறங்கிக் கொண்டிருந்தேன். பி.ப 2.40 மணியளவில் எனது கைத்தொலைபேசி அலறல் ஒலி கேட்டுக் கண்விழித்து தொலைபேசியில் உரையாடியபோது, எனது நானாவின் மகன் ஏ.ஏ.றிம்சாத் யூசுப் மௌலவி மாமா மௌத்தாகிவிட்டார்கள் என தளுதளுத்த குரலில் கூறினார். நான் நிலை தளர்ந்து போய்விட்டேன் என்னால் நம்பமுடியவில்லை. இதனை உறுதிசெய்ய அவரது மூத்த மருமகன் ஏ.எல்.எம். நளீப் அதிபரிடம் கேட்டுத்தெரிந்து, உறுதி செய்தபின் எனக்குள்ளேயே அழுது கொண்டிருந்தேன், இவ்வாறு துன்புற்றிருந்த வேளையில் அன்னாரின் நினைவு. மலருக்கு ஓர் ஆக்கம் தரும்படி கேட்டதற்கிணங்க இவ்வாக்கம் என்னால் வழங்கப் படுகிறது.

மர்ஹூம் எம்.எம். யூசுப் மௌலவி அவர்கள் எனது தாயின் மூத்த சகோதரனான மர்ஹூம் கமுறுதீன் அப்துல் முத்தலிபின் மூத்த மகனாவார். அவ்வகையில் எனக்கு மச்சான் (மைத்துனர்) உறவினர் ஆவார். இவர் காலஞ் சென்றவர்களான கமுறுதீன், குறுசின் வீவி, தம்பதியினரின் மூத்த மகனான அப்துல் முத்தலிபினதும், பக்கீர்த் தம்பி, அசியா உம்மா தம்பதிகளின் ஏக புதல்வியான ஆசியத்தும்மா வினதும் மூத்த புதல்வராக இவ் அவனியிலே 1948.01.16 ஆந் திகதி அவதரித்தார்.

இவர் ஆரம்பக் கல்வியை தி/கிண்/ஈச்சந்தீவு விபுலானந்தா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டிருந்த வேளை, மார்க்கக் கல்வியையும் இணைந்து பெற வேண்டும் என்பதற்காக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிண்ணியாவிற்கு வருகை தந்து தாய்வழிப்பாட்டனரான மர்ஹூம் குஞ்சித்தம்பி ஹாஜியாவின் வீட்டிலிருந்து ஆன்மீகக் கல்வியையும் இலௌகீகக் கல்வியையும் ஒன்றாகப் பெற்று வந்தார். க.பொ.த (சா/த) பரீட்சையிலும், மௌலவி சான்றிதழ் பரீட்சையிலும் சித்தியடைந்து, உபதபாலதிபராகவும், அதன் பின் ஆசிரியராகவும் நியமனம் பெற்றார். இது மர்ஹூம்களான பக்கீர்தம்பி, கமுறுதீன் குடும்பத்தவர்களது முதலாவது அரச நியமனமாகும். இதனால் இரு குடும்பத்தவர்களாலும் மிகக் கௌரவமாகவும், அன்பாகவும் நேசிக்கப்பட்டார்.

மர்ஹூம் பக்கீர்த் தம்பி ஆசியத்தும்மா தம்பதிகளுக்கு மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் குழந்தைச் செல்வங்களாகக் கிடைத்தன. இப்பெண்ணே யூசுப் மௌலவி அவர்களின் அருமைத்தாயார் ஆவார். அதுபோலவே கமுறுதீன் குறுசின் வீவி தம்பதிகளுக்கு 9 ஆண்களும் ஒரு பெண்ணும் (கட்டுரையாசிரியரின் தாய்) மக்களாகக் கிடைத்தனர். இதில் மூத்த புதல்வரே மர்ஹூம் யூசுப் அவர்களின் தந்தையாவார். இவர் இருவழி குடும்ப உறுப்பினர்களோடும் மிக நெருக்கமாக உறவைப் பேணி வந்தார். இன்ப துன்பங்களில் கலந்து கொள்ளல், பிரச்சினைகள் அதாவது முரண்பாடுகள் ஏற்படுகின்ற போது தேவையான ஆலோசனைகளையும், தீர்வுகளையும் முன்வைத்தல் என்றவாறாக இரத்த உறவுகளோடு மரணிக்கும் வரைக்கும் உறவைப் பேணி வந்தார்.

மர்ஹூம் யூசுப் மௌலவியின் மைத்துனன் என்ற வகையிலும், நான் அவரோடு சிறுவயது முதல் பழகியவன் என்ற வகையிலும் கண்ட அனுபவங்களையே இக்கட்டுரையூடாக முன்வைக்கின்றேனே தவிர வேறு எந்த மிகைப்படுத்தலும் ஒரு இம்மியளவும் கிடையாது. பெற்றோரைப் பேணுவதில் மௌலவி அவர்கள் ஒரு தனி ரகம். தினமும் பெற்றோரைச் சந்தித்தல், அவர்களது தேவைகளை உடனுக்குடன் இயன்ற வரைப் பூர்த்தி செய்தல், அவர்களுடன் இன்முகத்துடன் உரையாடல், அவர்களது வார்த்தைகளை மதித்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை மிக அக்கறையோடு செய்த பெருமை மௌலவி யூசுப் அவர்களையே சாரும்.

அன்னார் ஒரு சகோதரருடனும் மூன்று சகோதரியுடனும் பிறந்து, ஒற்றுமையாக வளர்ந்து மரணிக்கும் வரையிலும் உறவை துண்டிக் காமல் வாழ்ந்து வந்தவர். அவர்களுக்கு உடல், உள, பொருளாதார ரீதியாக முடியுமானவரையில் உதவி செய்தவர் திருமணப்பேச்சு, நோய்ப்பட்டவர்களுக்கான உதவிகள் ஆலோசனைகள், முரண்பாடு களை தீர்த்து வைத்தல், அடிக்கடி போய்ச் சந்தித்தல் போன்ற செயற்பாடுகளில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவரே யூசுப் மௌலவி அவர்கள்.

மர்ஹூம்களான அகம்மது ஹாஜியார் ஆமினா தம்பதிகளின் ஏகபுதல்வியான ஜனூன் ஜாரியா உம்மாவை இல்லறத்துணைவியாக ஏற்று, இல்லற வாழ்வை நல்லறமாகப் பேணி 4 பெண் பிள்ளை களையும் ஒரு ஆண் மகனையும் பெற்றெடுத்து, அன்பாக வளர்த்து, அறிவு புகட்டி ஒழுக்கசீலர்களாக்கி, அனைவரையும் ஆசிரியர்களாக்கிய பெருமையும் மர்ஹூம் யூசுப் மௌலவி அவர்களையே சாரும். அனைத்து பிள்ளைகளும் இல்லற வாழ்வில் இணைந்து மன மகிழ்வோடு வாழ்க்கையைக் கழித்து வருகின்றனர். மௌலவியின் குணத்துக்கும் தகைமைக்கும் ஏற்றாற்போல மருமக்கள் அமைந்துள்ள மையும் அவர்களுக்குக் கிடைத்த பெரும்பாக்கியமேயாகும்.

நான் சிறு வயது தொடக்கம் எனது சகோதரனின் வீட்டிலிருந்து படித்து வந்தவன். எனது மச்சானான யூசுப் மௌலவியின் வீடும் அருகிலேயே இருந்தது. ஒரு நாளின் அரைவாசிப்பொழுது அவரின் வீட்டிலேயே கழியும். அவ்வளவு நெருக்கமாகவும் இறுக்கமாகவும் நான் பழகியமைக்கும் அவரின் நற்குண சக்தியே காரணம் என்பது மிகை அல்ல. கணவன், மனைவி, பிள்ளைகள் உறவு நகமும் சதையும் போலவே எப்போதும் இருந்தது. சண்டை சச்சரவுகளை நான் ஒரு துளி அளவுகூட அவரிடத்தில் காணவில்லை. மனைவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவேளைகளில் கோபித்தால்கூட அதனைப் பொருட்படுத்தாமல் தனது புன்முறுவல் பூத்த முகத்துடனேயே மௌலவி அவர்கள் தினமும் காட்சியளிப்பார். மனைவியின் சகோதரர்களுடனும் இணக்க மாகவும் மிகநெருக்கமாகவும் செயற்பட்டவர்.

நான் இடைக்கிடையே அவரது வீட்டுக்குச் செல்வது வழக்கம். மாலைவேளைகளிலும், இரவு 8 மணிக்குப் பின்னரும் செல்கின்ற போது காணுகின்ற காட்சி எனக்கு மனமகிழ்வைத்தரும். மௌலவி அவர்கள் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் என்பவர்களோடு முற்றத்தில் அமர்ந்து அறிவுரைகளையும், ஆலோசனை களையும் வழங்கிக்கொண்டிருப்பதோடு, பேரப்பிள்ளைகளின் விளையாட்டுக்களையும் பார்த்து இரசித்துக் கொண்டிருப்பார். இவ்வாறான செயற்பாடுகளை இன்றைய குடும்பங்களில் காண்ப தென்பது முயற் கொம்பாகும்.

பல சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக்கொண்ட மௌலவி அவர்கள் அனைவருடனும் மிக அன்பாகவும், பண்பாகவும் பழகியவர். ஒரு இம்மியளவு கூட மனம்நோகும்படி நடந்து கொள்ளாதவர் மாற்று மத சகோதரர்களுடன் பின்னிப்பிணைந்து பழகியவர். அவர்களது இன்பதுன்பங்களில் கலந்து கொண்டவர். இன வன்முறைகள் இடைக்கிடையே வெடிக்கின்றபோது, அவற்றைக் களைந்து அனைத்துத் தரப்பையும் ஒற்றுமைப்படுத்துவதிலும் மௌலவி அவர்கள் முன்னின்று செயற்பட்டவர்.

இவ்வாறு அனைத்து உள்ளங்களாலும் நேசிக்கப்பட்டு போற்றும் நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தவேளை எவருக்கும் எவ்வித இடையூறோ, சிரமமோ கொடுக்காது, சிறிது நோய் வாய்ப்பாட் டிருந்த நிலையில் உறவினர்களோடு உரையாடிக் கொண்டிருக்கும் போதே 2020.10.04 ஆந் திகதி மாலை 2.30 மணியளவில் அன்னாரின் இன்னுயிர் இவ்வுலகைவிட்டும் நீங்கியது. அன்னாரின் பாவங்களை மன்னித்து ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனத்தை இறைவன் வழங்க அனைவரும் பிரார்த்திப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூசுப் மௌலவி பற்றி இவர்கள்

## [ முகநூலில் தெரிவித்த கருத்துகள் ]

- *சுமையா அரபுக் கல்லூரிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய மனிதர், புன்னகையுடன் பேச்சு, கோபிக்காத சுபாவம், சிரித்த முகம் யூசுப் மௌலவியின் அணிகலன்கள். அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து கப்ரை விசாலமாக்கி உயர்ந்த சுவனத்தை வழங்குவானாக.*

**அஷ்ஷெய்ஹ்** M.Z.M. **பாஹிர் சுபைர்.** (BA)
**உப அதிபர், சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி**

- *நானும் அன்னாரிடம் படித்திருக்கின்றேன். பணியும் புரிந்தேன். அல்லாஹ் அன்னாரின் பாவங்களை மன்னித்து அருள்புரிவானாக. அவர் மிகவும் நல்லவர்.*

**அஷ்ஷெய்ஹ்** M.A.M. **றபீஸ் மதனீ** (MA)
**அதிபர், சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி**

- *அறியாத ஒருவரி இருப்பினும் அவரைப் பற்றிய வரிகள் நல்ல பண்புகளுடையவர் எனக் காட்டுகின்றன.*

**முகம்மட் அகம்மட்**

- *எனது இஸ்லாம் பாடம் மற்றும் வகுப்பாசிரியருமாவார். அன்னாரை அல்லாஹ் உயர்வான இடத்தில் வைப்பானாக.*

**முகம்மட் றியாஸ்**

- *சுமையா அரபுக் கல்லூரியில் என்னை அங்கத்தவராக இணைப் பதற்கு காரணமாக இருந்தவர். 30 வருட காலமாக சுமையா அரபுக் கல்லூரியில் அவருடன் பணிபுரிந்துள்ளேன். அன்னாரின் பாவங்களை மன்னித்து அல்லாஹ் அருள்புரிவானாக. (நேரடிக் கருத்து)*

**அல்-ஹாஜ் எஸ்.எம். ஷரீப்,** BA
**ஓய்வுபெற்ற அதிபர்,**
**தலைவர், சுமையா பெண்கள் அரபுக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org